உ

சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை

Monthly Journal of Sivapoomi

சிவம்~06 விசுவாசுவ வருடம் புரட்டாதித் திங்கள் பூமி~09

புரட்டாதி ~2025



# பாடசாலைகளில் நவராத்திரி விரத காலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்



கடந்த சில வருடங்களாக இலங்கையில் உள்ள தமிழ் பாடசாலைகளில் நவராத்திரி விழா காலங்கள் சிறப்பாக நடைபெறுவதில்லை. காரணம் நவராத்திரி காலங்களில் பாடசாலைகளில் பரீட்சைகளை நடத்துவதாலும், ஒரு சில திணைக்களங்கள் மாணவர்கள் இடையே போட்டிகளை நடத்துவதாலும் நவராத்திரி கால பாரம்பரிய கலை பண்பாட்டு நிகழ்ச்சிகள் தடைப்பட்டு போகிறது.

பல பாடசாலைகளில் இப்பொழுது நவராத்திரி தின பூஜைகள் சுருங்கிக் கொண்டு வருகின்றது. முன்பு நவராத்திரி காலம் என்பது அனைத்து மாணவர்களும் அரங்கேறுவதற்கும், தமது ஆளுமைகளை வெளிப்படுத்துவதற்கும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்ட காலம். முப்பெரும் தேவியர்களுக்காக நடைபெறுகின்ற நவராத்திரி விழா பள்ளித்தலங்கள் தோறும் அலங்காரம் செய்யப்பட்டு மாணவர்கள் மகிழ்ச்சியாக சமய விழுமியங்களை அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்ட காலம். பல பாடசாலைகளில் சிறப்பு சொற்பொழிவுகளும், சான்றோர்களை அழைத்து அவர்களுடைய கருத்துக்களை மாணவர்கள் கேட்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதும் வழக்கமாக இருந்தது. ஆனால் இன்றோ நவராத்திரி காலங்களை சுருக்கி காலை சிறிது நேர இறை வழிபாட்டோடும், விஜயதசமி அன்று மிகச் சுருக்கமாக ஒரு சில நிகழ்வுகளை நடாத்தி விழாவை முடித்துக் கொள்ளுவதும் வழக்கமாகி விட்டது. இவ்வாறு நாம் காணும் பாடசாலை சூழலின் நிலை மாற வேண்டும்.

முன்பு எப்படி நவராத்திரி காலம் எல்லா பாடசாலைகளிலும், எல்லா மாணவர்களும் ஒன்றிணைந்து செயல்படுகின்ற ஒரு காலமாக, அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்ற காலமாக, பல மாணவர்கள் அரங்கப்பிரவேசம் செய்கின்ற காலமாக நவராத்திரி விளங்கியது. சமீப காலமாக கல்வித் திணைக்களங்கள், சமய விழாக்களுக்கு ஏற்படுத்துகின்ற இடையூறு என்பது எல்லையற்றது. பாடசாலை நேரத்தை சரஸ்வதி பூஜைகளுக்கு செலவு செய்ய

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

வேண்டாம் என்று சில சில கல்வி பணிப்பாளர்கள் அதிபர் கூட்டங்களில் கூட கூறி இருப்பதை நாம் அறிவோம். கடந்த சில காலங்களாக நவராத்திரி காலத்தில் பரீட்சைகள் நடத்தப்படுவது வழக்கமாகிவிட்டது. எனவே இந்த நிலை மாற வேண்டும். அனைத்து பாடசாலை அதிபர்களும் சுயமாக சிந்தித்து இந்த சரஸ்வதி பூஜை விழாக்களை நல்ல முறையிலே கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மாணவர்களின் எதிர்கால நன்மை கருதி அவர்கள் சுயமாக தமது ஆற்றல்களை வழிப்படுத்துகின்ற களமாக இந்த நவராத்திரி கால நிகழ்ச்சிகள் அமைய வேண்டும்.



இன்று சமய புரள்வுகள் அதிகம் ஏற்பட்டு விட்டது என்று பலரும் கவலைப்படுகிறார்கள். இது சம்பந்தமாக பலரும் ஊடகங்களில் கட்டுரை எழுதுவதும், மேடைகளில் பேசுவதும் வழக்கமாகிவிட்டது. இதற்கு அடிப்படைக் காரணம் சமூக விழுமிய பண்புகளை பாதுகாக்க கூடிய வைபவங்களை பாடசாலைகளிலே நடாத்தாமைதான். பாடசாலைகளிலே தமிழ்ச் சங்கம், இந்து மன்றம், சூழல் மன்றம், இலக்கிய மன்றம், சாரணிய அமைப்பு இவையெல்லாம் சரியாக செயல்படுமே ஆனால் மாணவர்கள் வேறு புரள்வுகளுக்குள் அகப்படாமல் நிதானமாக வாழ்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும். எனவே நவராத்திரி காலத்தை எங்கள் பண்பாட்டுப் பாரம்பரிய காலமாக அனைத்து தமிழ் பாடசாலைகளிலும் கொண்டாடுவதற்கு அதிபர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். பாடசாலை பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும். இது இந்த காலத்திற்கு வேண்டிய கட்டாய கடமை ஆகும்.

கலாநிதி செஞ்சொற்செல்வர்
ஆறு.திருமுருகன்

# ஆத்ம சாந்தி பிரார்த்தனை




ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி இறுதியாக காரைநகர் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்று, பின்னர் ஓய்வு காலத்தை எமது சிவபூமி அறக்கட்டளையுடன் இணைந்து சமய மற்றும் சமூக பணியாற்றியவரான மூளாய் மத்தி சுழிபுரத்தைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி ஸ்ரீ விக்கினேஸ்வரன் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். சிவபூமி அறக்கட்டளையின் தோற்றம் முதல் எம்மோடு தோளோடு தோள் கொடுத்து பல உதவிகள் செய்து, எமது செயலாளராய் பல பணிகளை முன்னெடுத்த பெருந்தகையின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். அறப் பணிகள் பல செய்த அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

# உலகத்திருக்குறள் மாநாட்டில் சிறப்புரையாற்ற கனடா சென்றுள்ளார் கலாநிதி ஆறு. திருமுருகன்




கனடாவில் 6 ஆவது உலகத்திருக்குறள் மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் சிறப்புரை ஆற்றுவதற்காக கலாநிதி ஆறு. திருமுருகன் கனடா சென்றுள்ளார். கனடா சென்றடைந்த விமான நிலையத்தில் விழாக்குழுவினர் கலாநிதி ஆறுதிருமுருகனை வரவேற்றனர்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பிரபல பேச்சாளர்கள் பங்கு பற்றும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களை அழைத்துள்ளமை இந்த மண்ணின் மக்களாக நாம் பெருமைப்பட வேண்டிய தருணம்.





மாநாட்டில் அவர் ஆற்றிய சிறப்புரையை பலரும் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்கள். ஈழத்தில் மாவிட்டபுரம் மண்ணில் திருக்குறளுக்கு வளாகம் அமைத்து கருக்கற்களில் பொய்யாமொழியையும் அதை தந்த வள்ளுவனையும் வடிவமைத்த பெருமகனாரை திருக்குறள் மாநாட்டில் சிறப்புரை ஆற்ற அழைத்து கௌரவம் செய்துள்ளார்கள்.






# யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது



யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்காக சிறப்பான ஆசி வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் மிகுந்த பக்தி பூர்வமாகவும் உற்சாகமாகவும் நடைபெற்றது.





இந்நிகழ்வில் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தனது அரிய வழிகாட்டுதலையும் ஆசியையும் வழங்கினார்.

மேலும், பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் தங்கள் வாழ்த்துகளையும் உற்சாக வார்த்தைகளையும் பகிர்ந்து கொண்டு மாணவர்களின் மன உறுதியை வலுப்படுத்தினர்.

மாணவர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடனும் பக்தியுடனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் கல்வி பயணத்தில் புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் பெற்றனர். இவ்வாறு நடைபெற்ற இந்நிகழ்வு மாணவர்களின் எதிர்கால சாதனைகளுக்கு ஒரு வலிமையான அடித்தளமாக அமைந்தது.









# முள்ளிவாய்க்காலில் அமையவுள்ள சிவபூமி மாற்றுவலுவுள்ளோர் பாடசாலை கட்டட வேலைகள் ஆரம்பம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுவலுவுள்ளோர் பாடசாலை ஒன்றின் தேவை உணரப்பட்டமையால் மாவட்ட செயலாளரினால் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று முள்ளிவாய்க்காலில் அரசினால் வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணி வழங்கப்பட்டது. அந்த இடத்தில் சிவபூமி அறக்கட்டளையினரால் அபயம் அறக்கட்டளை அனுசரணையுடன் அமையவுள்ள மாற்றுவலுவுள்ளோர் பாடசாலைக்கான ஆரம்ப வேலைக்கான நாள் கல்லு வைத்தல் நிகழ்வு இடம்பெற்று கட்டிட வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்து கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்தனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்த பூமியில் சிவபூமி அறக்கட்டளையின் இந்த அறப்பணி மக்களுக்கு பல வழிகளில் உதவும் என்று நம்பப்படுகிறது.







# யாழ் வந்த ஜனாதிபதி மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்



இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வடக்கில் உள்ள பொதுமக்களின் காணிகளை முழுமையாக விடுவிப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டு மின்றி சைவ சமயத்தவர்களின் வணக்க ஸ்தலங்களையும் விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் யழ்ப்பாணம் வருகை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதைக் குறிப்பிட்டார். அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்

“ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு முதலாம் திகதி வருகை தந்து பல திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார் என அறிகின்றோம். அவரது வருகை ஆக்கபூர்வமாக அமைய வேண்டுமானால் நீண்ட காலப் போரினால் பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரின் பயன்பாட்டில் அவர்களது ஆதிக்கத்தின் கீழ் உள்ளன. இத்தகைய காணிகள் பொது மக்களின் பயன்தரும் நிலங்களாகும். பல வளங்களைக் கொண்டவையாகும். அத்தகைய காணிகளை விடுவிப்பதன் மூலம் மக்கள் தமது அன்றாட தேவைகளை தாங்களே நிறைவேற்றிக் கொள்ள முடியும். யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இருக்காது. எனவே இந்த மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது மட்டுமன்றி காங்கேசன்துறைக் கடற்கரையில் புராதன அடையாளமாக விளங்கிய சுக்கிரவார திரிகோண சக்கர சத்திரம் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் தல்சவன விருந்தினர் விடுதி

அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மேலும் காங்கேசன்துறை கீரிமலையில் அமைந்துள்ள சடையம்பாள் மடம் மற்றும் ஆதிசிவன்கோவில் இடித்து அழிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீளக் கட்டுவதற்கும், விடுவிக்கப்படாமல் உள்ள இந்து மக்களின் பல புராதன மடங்கள், ஆலயங்கள் விடுப்பதற்கும் யாழ் வரும் ஜனாதிபதி துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றாக இந்த நிலங்கள் இருக்கின்றமையால் ஜனாதிபதி நல்லெண்ண செயற்பாடாக இவற்றை விடுவிப்பதற்கு துரித நடவடிக்கைகளைத் தமது யாழ். விஜயத்தின் போது காண்பிக்க வேண்டும்." என்றார்.

## சிவபூமி மற்றும் அபயம் அறக்கட்டளைகளின் ஸ்தாபகர்கள் மலையகத் தமிழ் உறவுகளை சந்தித்தனர்



கண்டி கலஹாவில் மலையக தமிழ் உறவுகளுக்காக அபயம் அறக்கட்டளையின் ஒத்துழைப்புடன் நடாத்தி வருகின்ற சிவபூமி மலையக ஆச்சிரமத்திற்கு இலண்டனில் இருந்து 13.09.3025 வருகை தந்திருந்த அபயம் அறக்கட்டளை ஸ்தாபகரும் புகழ்பெற்ற வைத்திய நிபுணருமான க. பார்த்தீபன் அவர்கள் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்களுடன் இணைந்து மலையக ஆச்சிரமத்தில் நடைபெறும் அறப்பணிகளை பார்வையிட்டார்.

அங்கே தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் அறநெறிப் பாடசாலையில் கற்கும் மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு பரிசில்களையம் வழங்கி அவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்தனர். மேலும் மலையகத்தில் நடைபெறும் ஏனைய அறப்பணிகளையும் பார்வையிட்டார்கள்.







# கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள் வழங்கிய நிகழ்வுகள்.



நல்லூரானின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இளம் கலைஞர் மன்றம் நடாத்தும் தெய்வீக இசை அரங்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர்களை சிறப்பாக பயிற்றுவித்து மேடையேற்றிய ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.





# ஆத்ம சாந்தி பிரார்த்தனை



தென்மராட்சியின் பிரபல தமிழ்ப் பேராசான் கவிஞர் த. நாகேஸ்வரன் (வயது 68) இன்று 12.09.2025 அதிகாலை சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். தென்மராட்சியில் பல்லாயிரம் மாணவர்களுக்கு தமிழ் கற்பித்த தமிழ் கற்பித்த ஆசான் அவர் ஆவர்.

அன்னாரின் இழப்பு ஈழத்தமிழருக்கு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

# விளையாட்டுப் போட்டியில் சாதித்த எமது சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்கள்




10.09.2025 அன்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற வடமாகாண மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் பரிசில் பெற்ற எமது கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப்பாடசாலை மாணவர்களான வாசுதேவன் திவியட்சன், உதாஸ்கரன் வினோஜா, சிவலிங்கம் சர்வேஸ் ஆகியோரின் திறமை கண்டு நாம் பெருமை அடைகிறோம்.




அதேபோல குண்டெறிதல் போட்டியில் பரிசில் பெற்று எமக்கு பெருமை தேடித் தந்துள்ளார் எமது கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப்பாடசாலை மாணவன் விஜயகுமார் துவாரகன்.


இவர்களுக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள். மேலும் பல பரிசில்கள் இவர்கள் வசமாக இறைவனை பிரார்த்திக்கிறோம். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவயர்கள்.







# மிகச் சிறப்பாக நடைபெற்ற பொன்னாலை வரதராஜர் மகோற்சவம்



அருட்பெருமையும் வரலாற்றுப் பழமையும் மிக்க, சொர்ணாலயம் என சிறப்பாக போற்றப்படும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த மகோற்சவம் 28.08.2025 அன்று நண்பகல் 12 மணிக்கு தெய்வேந்திர முகூர்த்தத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

மிகுந்த ஆன்மிக உற்சாகத்துடனும் பக்தி பூர்வமாகவும் மகோற்சவம் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் காலை, மாலை நடைபெற்ற சிறப்பு ஆராதனைகள், அரங்கனின் திருப்பாடல்கள், வேதமந்திர உச்சாடனங்கள் மற்றும் இசை வாத்தியக் குழுக்களின் பங்கேற்பு வழிபாட்டின் பெருமையை உயர்த்தியது.



அலங்காரத் திருக்கோலங்களில் வரதராஜப் பெருமாள் உலா வருகை தந்து பக்தர்களை அருளால் பூரிக்கச் செய்தார்.



# தொடரும் பாரம்பரியத்துடன் நிகழ்ந்த செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம்




வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், வடக்கு மக்களின் ஆன்மீகத் தளங்களில் பிரசித்தி பெற்ற ஒன்றாக விளங்குகிறது. இந்த ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் வருடாந்த மகோற்சவம், பக்தர்களின் மனங்களில் பேராதரவு பெறும் புனித நிகழ்வாகும்.

இம்முறை நடைபெற்ற மகோற்சவம் மிகுந்த பக்தி உணர்வுடனும், சிறப்புடனும் மரபுச் சடங்குகளுக்கு ஏற்ப நடைபெற்றன. ஆலய வளாகம் முழுவதும் அழகிய அலங்காரங்களாலும், மின்விளக்குகளாலும் ஒளிர்ந்து கொண்டிருந்தது.







பக்தர்கள் பலரும் ஊர்ஊராகக் கூடி வந்து முருகப்பெருமானின் அருளைப் பெறத் தவமிருந்தனர். இசை, வாத்தியம், பஜனை போன்றவை ஆன்மீகச் சூழலை அதிகரித்தன. சாமி ஊர்வலங்கள், காவடிகள் போன்றவை பக்தர்களுக்கு பேரானந்தம் அளித்தன. இ,ந்த ஆண்டு மகோற்சவம், பக்தர்களின் பக்தியையும் சமூக ஒற்றுமையையும் வெளிப்படுத்தும் சிறப்பான ஆன்மீக நிகழ்வாக அமைந்தது.







# புரட்டாதிச் சனி விரதச் சிறப்பு



ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை வந்துபோகிறது. எனினும், புரட்டாதி மாத்தில் வரும் சனிக்கிழமை தனித்துவம் பெறுகிறது. இந்து மக்கள் இந்நாளில் விரதமிருந்து சனீஸ்வர பகவானை வழிபாடு செய்வது வழக்கம்.

நவக்கிரக நாயகர்களுள் ஒருவர் சனீஸ்வர பகவான். "கனிவுள்ள தெய்வம் நீயே கதிரசேயே -காகம் ஏறும் தம்பிரானே! உனைத் துதித்தேன் தமியனேற்கு அருள் செய்வாயே!" என்கிறது நவக்கிரக தோத்திரப்பாடல்


சனீஸ்வர பகவானை திருப்தி செய்வதற்காகவும், சனிதோஷத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும் வகையிலும் சனிக் கிழமை விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. வருடம் முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விரதம் அனுஷ்டிக்க

முடியாதவர்கள், தவறாது புரட்டாதி மாத்தில் வரும் சனிக்கிழமைகளில் விரதமிருப்பார்கள். அவ்வகையில் விரதமிருப்பவர்கள் காலையில் தலைக்கு எஸ் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, பின்னர் ஆலயத்திற்குச் சென்று சனீஸ்வர பகவானுக்கு எள் எண்ணெய் தீபமேற்றி வழிபாடு செய்வதுடன், மதிய உணவு அருந்துவதற்கு முன், சனீஸ்வர பகவானுடைய வாகனமான காகத்திற்கு அன்னம் படைப்பதும் வழக்கம்.

சனீஸ்வர பகவானைப்போல கொடுப்பவரும் இல்லை. கெடுப்பவரும் இல்லை என்ற வாக்கியமொன்று உள்ளது. நவக்கிரக நாயகர்களுள் ஒருவர் என்ற வகையில் வாழ்க்கை நலத்திற்கு சனீஸ்வர பகவானுடைய வழிபாடு பெரிதும் தேவையாகவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# நூற்றாண்டு பிறந்தநாள் காணும் எங்கள் ஆசான் க.சிவராமலிங்கம்பிள்ளை



-கலாநிதி ஆறு.திருமுருகன்-

தமிழ் ஆற்றலாளர் பலரை உருவாக்கிய ஆசான் க.சிவராமலிங்கம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு பிறந்த தினம் 16.09.2026 அன்று கொண்டாடப்படுகிறது. ஈழத் திருநாட்டில் பல சான்றோர்களை நம்மண்ணுக்குத் தந்த புங்குடுதீவு கிராமத்தில் 16-09-1925 ஆம் ஆண்டு சைவ சித்தாந்த அறிஞரும் சிறந்த ஆயுள்வேத வைத்தியருமாகிய கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளுக்கு மைந்தனாக இப் பெருமகனார் பிறந்தார். சிவபூசையும் சைவசித்தாந்தப் பாரம்பரியமும் பேணிய இக்குடும்பத்தில் பிறந்த இவர் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிலும், யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

1941ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் தனது கல்வியைத் தொடர்ந்து இந்துக் கல்லூரி வாழ்வில் தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி வாகை சூடினார். கல்லூரி நாடக அரங்குகளில் பங்கு கொண்டு பிரபல்யம் பெற்றார். சுல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வனாகவும், விடுதிச்சாலை மாணவ முதல்வனாகவும் விளங்கினார், பாடசாலை விவாதக் குழுவில் தலைமை தாங்கி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியோடும், யாழ் மத்திய கல்லூரியோடும் ஆங்கில விவாதப் போட்டிகளில் பங்குபற்றி பாராட்டுப் பெற்றார். அதிபர் ஏ. குமாரசாமி அவர்கள் இவரது திறமையைக் கண்டு பெரிதும் பாராட்டினார். பாடசாலை மாணவனாக கற்கும் போதே சைவபரிபாலன சபை நிகழ்ச்சியில் ஆசிரியர் மயில்வாகனம் வாய்ப்பை ஏற்படுத்தினார். சைவபரிபாலன சபை மாநாட்டில் இந்திய அறிஞர்கள் சபையில் பாராட்டுப் பெற்றார்.

விஞ்ஞானத் துறையில் கற்றுக் கொண்டிருந்த இவர் தமிழில் கொண்ட ஆர்வம் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று பேரறிஞர்களிடம் கற்றுத் தேறினார். அங்கு பட்டம் பெற்று நாடு திரும்பியதும் 1950 இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூ ரி நிர்வாகம் இவரை ஆசிரியராக நியமித்தது. 1950முதல் 1985 வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பணியாற்றினார். கல்லூ ரியில் இருமொழிப் புலமை மிக்க ஆசானாக சீரிய புலமையும் ஆளுமையும் மிக்க ஆசிரியரவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு அவரது ஒருகால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் மனம் தளராது கோலூன்றியவாறு வகுப்பறைகளில் கற்பிப்பதோடு மேடைகளில் அரும்தமிழ் முழக்கம் செய்து வந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எந்தத் தமிழ் விழாவிலும் சைவ சமய விழாவிலும் இவரது உரை முக்கிய இடம்பெற்றது.

இவரிடம் கற்றவர்கள் இலக்கிய உலகில் நன்கு பிரகாசித்தனர். சுந்தரர் டிவகலாலா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன். பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை போன்ற அறிஞர்கள் இவரது தலை மாணாக்கர்கள் எனலாம். பல நூற்றுக் கணக்கான மாணவர்களை மேடையேற்றிப் பேசவைத்த பெருந்தகை இவர். அகில இலங்கை கம்பன் கழகப் பிதாமகன் கம்பவாரிதி முதல் என் போன்ற பலரை இந்துக் கல்லூரி மேடைக்கு அறிமுகம் செய்தவர். ஏழை மாணவர்கள் மீது என்றும் இரக்கம் காட்டுபவர். அவரது இரக்கம் பற்றி விடுதிச்சாலையில் இருந்த மாணவர்கள் இன்றும் சொல்லி மகிழ்வார்கள். தூய வெள்ளைவேட்டி, வெள்ளைச் சேட் திரு நீறு, சந்தனம் அவரது சிறந்த மேனியை மேலும் அழகுபடுத்தும். ஷேக்ஸ்பியர் பற்றியும் பேசுவார் சேக்கிழார் பற்றியும் பேசுவார். அவரது இரு மொழிப் புலமை பலருக்கு பயன் தந்தது. அவர் இறக்கும் வரை நேர்முகப் பரீட்சைக்கு செல்பவர்கள் அவரிடம் நற்சான்று பெறக் காத்திருப்பார்கள்.

ஆசானின் மாணவர்கள் பேராசிரியர்களாக, அரச அதிபர்களாக, பிரதேச செயலர்களாக. சிறந்த கல்வியாளர்களாக விளங்கினர். ஆரம்பத்தில் விஞ்ஞானத்துறையிலும் சிறப்பாக கற்பித்த காரணத்தினால் பல் துறைசார்ந்த விற்பன்னர்கள் இவரிடம் கற்றவர்களாக விளங்கினர். ஆசிரியர் கலாசாலையில் சில வருடங்கள் விரிவுரையாளராக பணியாற்றினார். அதனால் பல ஆசிரிய மாணவர்கள் இவரிடம் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். சைவசித்தாந்த அறிவும், தமிழ் இலக்கண, இலக்கிய அறிவும் மிக்க இவரிடம் பல்கலைக்கழக மாணவர்களும் சென்று கற்றனர்.

இவரது கந்தர்மடம் வீடு அன்றும் இன்றும் அறிவாலயமாகவே திகழ்கிறது.

கம்பன் கழகக் காவலராக விளங்கிய எங்கள் ஆசானிடம் ஒன்பதாம் வகுப்பு முதல் தமிழ் கற்கும் பேறு சிறியேனுக்கு கிடைத்தது. எனது தாய், தந்தை இருவரும் ஆசிரியர்கள். எனது தாயார் யாழ் இந்துக் கல்லூரி குருளைச் சாரண ஆசிரியராக விளங்கியவர். அதனால் குடும்ப நட்பாக எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு நீண்டது. எனது முன்னேற்றத்தில் மிகவும் அக்கறையாக விளங்கினார். கம்பன் கழகத்தில் எதிரும் புதிருமாக பட்டிமன்றம் விவாத அரங்குகளில் பேசும் வாய்ப்பு கிட்டியது. மேடையால் இறங்கியதும் நல்லாய் பேசினாய் என்று முதுகில் தட்டி பாராட்டுவார். கம்பவாரிதி நடுவராக வீற் றிருக்க அணித்தலைவராக அவரது ஆசிரியராகிய சிவராமலிங்கப்பிள்ளை பேசுவார். இத்தகைய பெருந்தன்மை இன்று யாரிடம் உள்ளது? எவரது பிரச்சினையையும் தீர்த்துவைக்கும் மனிதநேயர். மற்றவர்களுக்காக தனது முச்சக்கர வண்டியில் எங்கும் சென்று வருவார். அவரது ஆசிரிய நண்பர்கள் இவரை ஒரு தலைமகனாகவே கொள்வர்.

இவர் இறப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் க.சொக்கலிங்கம் (எழுத்தாளர்.சொக்கன்) இறந்தார். என்ன ஆச்சரியம் செம்மணிச் சுடலையில் எங்கள் ஆசான் முச்சக்கர வண்டியில் தானே ஓடிவந்து விட்டார். சுடலையில் "தேவன். சோமன், சொக்கன் போய்விட்டார்கள், எனி இராமனும் போகத்தானே வேணும்!" என்று கண்ணீர் விட்டார். சேட் கொலருக்குள் எப்பவும் கைத்துண்டு வைத்திருப்பார். கைத்துண்டை எடுத்துக் கண்ணைத் துடைத்து துடைத்து நண்பனுக்காய் அழுதார்.

என்றும் உயர்ந்த பண்புகள் கொண்ட எங்கள் ஆசான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நீண்டகால ஆலோசகராக விளங்கினார். நடமாடும் கலைக் களஞ்சியமாக திகழ்ந்தார். என் அன்புக்குரிய ஆசான் இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கண்டு கண்தானப் படிவத்தைத் தா என்று வலியுறுத்தினார். நான் நகைச்சுவையாக அவரோடு பேசினேன். "நான் சீரியசாகப் பேசுகிறேன். படிவத்தைக் கொண்டுவா!" என்று கட் டளை இட்டார். மறுநாள் படிவத்தைக் கொடுத்தேன். கண்தானப் படிவத்தை நிரப்பியதோடு கடிதம் ஒன்றும் எழுதித் தந்தார். தன் இறப்புக்குப் பின்னால் இரண்டு கண்களையும் எடுத்து பார்வை பிரச்சினை உள்ளவர்களுக்கு

கொடுங்கள். இதற்கு எனது பரிபூரண சம்மதம் என எழுதினார். என்ன ஆச்சரியம், ஒருமாத காலத்துக்குள்ளேயே திடீரென ஆசிரியர் இறந்தார். அவரது இறுதி ஆசைப்படி பேரப்பிள்ளைகளின் ஒத்துழைப்போடு யாழ்ப்பாணம் கரையூரைச்சேர்ந்த ஒரு நபருக்கு ஆசானின் கண்கள் எடுத்துப் பொருத்தப்பட்டன. கண் வைத்திய நிபுணர் டாக்டர் குகதாசன் அவர்களும் டாக்டர் செல்வி சரவணமுத்து அவர்களும் இப்பணியை நிறைவேற்றினர்.

அவர் வாழும்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதனை நிறைவேற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. சிலை திறப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை இன்றும் பசுமையாக உள்ளது.

அன்னாரின் இறுதி வைபவத்தில் தலைமை தாங்கி உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கண்ணீரோடு எங்கள் ஆசானின் இறுதிநாள் கழிந்தமை மறக்கமுடியாது. பலருக்குள் வாழும் இப்பெருவிருட்சம் பிறந்த நூற்றாண்டு விழாவில் நன்றியோடு நினைந்து போற்றுவோம்.

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

## யாழ்ப்பாண பல்கலைக்கழக புதிய வேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல் நியமனம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் குமாரவடிவேல் அவர்கள் கல்வியியல் துறையில் சிறப்பாகப் பணி புரிந்துவருபவர் மட்டுமல்லாது, தமிழ் சமூகத்தின் கல்வி மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்காக அர்ப்பணித்து செயல்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் இந்து கல்லூரி சதுரங்க அணி தேசிய ரீதியில் 3ம் இடம்



2025 ஆம் ஆண்டு இலங்கை தேசிய அணி சதுரங்க சாம்பியன்ஷிப்பில் விளையாடிய யாழ் இந்துக் கல்லூரி அணி 5 போட்டிகளில் 3 வெற்றிகளையும் 2 சமநிலை பெற்று 3 வது இடத்தைப் பிடித்தது. பி.ஜனுக்ஷான் 5 புள்ளிகளைப் பெற்று 5 வது பலகையில் சிறந்த வீரர் விருதையும், ஜே.கேதுஷன் 4.5 புள்ளிகளைப் பெற்று 7 வது பலகையில் சிறந்த வீரர் விருதையும் பெற்றார். வெற்றியாளர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்

# தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் சாதித்த யாழ் இந்துவின் மைந்தர்கள்



2025 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்று ராகவன் அக்சத்,ஜோய் சுரேந்திரன் டெரிக் சனோஜன், அசோகன் அறிவமுதன் ஆகியோர் மலேசியாவில் நடைபெறவுள்ள சர்வதேச விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கும் வெற்றிவாகை சூட மனமார்ந்த வாழ்த்துகள்.




தவத்தில் இருந்த ஒரு மகரிஷி, கண் திறக்காமல் தினமும் ஒருமுறை கையை நீட்டுவார். கையில் யாராவது எதையாவது போட்டால், என்ன ஏதென பார்க்காமல் விழுங்கி விடுவார். இவர் கையை நீட்டும் நேரம் பார்த்து, பக்தர்கள் கனிகள், அப்பம் முதலியவற்றை தருவர். இதனால் புண்ணியம் சேருமென கருதினர்.

ஒரு நாள் அந்நாட்டின் அரசன் வேட்டைக்கு வந்தான். அன்று பக்தர்கள் யாரும் வரவில்லை. அந்நேரத்தில் மகரிஷி கையை நீட்ட, அவரை பரிகாசம் செய்யும் நோக்கத்தில், மன்னன் தான் வந்த குதிரை போட்ட சாண உருண்டையைப் போட, மகரிஷியும் வாயில் போட்டார். மன்னன் சிரித்தபடியே போய்விட்டான்.

மறுநாள் முனிவர் ஒருவர் அரசவைக்கு வந்தார். முக்காலமும் உணர்ந்த அவர் “மன்னா! நேற்று நீ காட்டில் தவமிருக்கும் மகரிஷிக்கு குதிரைச்சாணம் கொடுத்தாய் இல்லையா?

அது நரகத்தில் மலை போல் வளர்ந்து கொண்டிருக்கிறது. நீ நரகம் வந்ததும் அதை உண்ண வைப்பர்” என சொல்லி விட்டு சென்றார்.

மன்னன் நடுங்கி விட்டான். தர்மம் செய்து, தன் பாவங்களை குறைக்க முடிவெடுத்தான். அரண்மனை நந்தவனத்தில் ஒரு

குடில் அமைத்து தங்கினான். இளம்பெண்களை வரவழைத்து, திருமணத்திற்குரிய நகை, பணம் கொடுத்து, பாவம் செய்வதின் கெடுதல் பற்றி எடுத்துக்கூறி அனுப்பி விடுவான்.

இதை அவ்வூரில் சிலர் வேறுமாதிரியாக கதை கட்டினர். "மன்னன், இளம்பெண்களை தவறான நோக்கில் வரச் சொல்கிறான். தவறுக்கு கூலியாக நகை, பணம் தருகிறான்"என்றனர்.

ஒருநாள், பார்வையற்ற கணவரை அழைத்து வந்த ஒரு பெண், அரசனின் குடில் முன்பு நின்று பிச்சை கேட்டாள். அந்த கணவன் "நீ யார் வீட்டு முன்பு இப்போது நிற்கிறாய்?" எனக் கேட்டார்.

"அரசன் வீட்டு முன்பு" என்றாள் அந்தப் பெண். "ஓ! தானம் கொடுப்பதாக சொல்லிக் கொண்டு பெண்களின் கற்பைச் சூறையாடுகிறானே அவன் வீட்டு முன்பா?" என்றார் அந்த பார்வையற்றவர். அந்தப்பெண் அவரது வாயை பொத்தினாள்.

"அன்பரே! என் கற்பின் சக்தியால் நான் முக்காலத்தையும் உணர்ந்தவள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த மன்னன், ஒரு மகரிஷிக்கு குதிரை சாணத்தை கொடுத்தான்.

அது நரகத்தில் மலையளவாக குவிந்து, இவன் உண்ணுவதற்காக தயாரானது. அவ்விஷயம் இவனுக்குத் தெரிய வரவே, இவன் கன்னியருக்கு தர்மம் செய்து, நற்போதனைகளை செய்தான். ஆனால் இவனை பற்றி தவறாகப் பேசி, அவனுக்காக குவிக்கப்பட்டிருந்த சாண மலையில், ஒவ்வொரு கவளமாக ஒவ்வொருவரும் பங்கிட்டு கொண்டனர். கடைசி கவளம் மட்டும் பாக்கியிருந்தது. இவனைப் பற்றி தவறுதலாக பேசி, அதை நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். அடுத்த பிறவியிலும் பார்வையற்றே பிறப்பீர்கள்" என்றாள்.

தவறு செய்தவர்கள் திருந்தும் முயற்சியை விமர்சிக்கக் கூடாது. அப்படி செய்தால் அவன் செய்த பாவங்களை பங்கு போட்டு கொள்ளும் நிலைமை ஏற்படும்.

இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(புரட்டாதி-2025) ISBN-978-955-7420-00-4